DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Name : சாந்தி | Father/Husband Name : கவிராஜ் S ராஜ்குமார் |
| Age : 54 | Village : சாத்தான்குளம் |
| Taluk : | Calling : |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21 Jan 2025

(Respondent not present. His Counsel present and filed a petition and allowed.)

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

36. 2021 ஆம் ஆண்டு என்னுடைய கணவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு. தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 80 சதவிகிதம் பாதிப்போடு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் நான் என்னுடைய கணவரை மருத்துவமனைக்கு சென்று பார்ப்பதற்கு ஒரு நாள் கூட செல்லவில்லை என்றால் சாட்சி முதலில் அவருடைய கணவருடன் இரண்டாவது மனைவி இருந்ததால் செல்லவில்லை என்று கூறிவிட்டு, மருத்துவமனைக்கு பார்க்க சென்றதாகவும் ஆனால் தங்கவில்லை என்றும் கூறுகிறார். என்னுடைய கணவரின் இரண்டாவது மனைவி அங்கு இருந்ததால் என்னை என்னுடைய கணவரை பார்க்க அனுமதிக்கவில்லை என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

37. என்னுடைய கணவர் 28 நாட்கள் மருத்துவமனையில் இருந்த நிலையில் நான் ஒரு நாள் மட்டும் தான் என்னுடைய கணவரை பார்க்க சென்றேன் என்றால் சரிதான், என்னுடைய கணவர் என்னை வரக்கூடாது என்று கூறியதால் நான் செல்லவில்லை. என்னுடைய கணவர் செயற்கை சுவாசத்தில் பேச முடியாத சூழ்நிலையில் இருந்ததால் அவர் அவ்வாறு கூறியிருக்க வாய்ப்பு இல்லை என்றால் அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை என்றாலும் கொஞ்சம் கொஞ்சம் பேசினார். நான் என்னுடைய கணவரை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு என்னுடைய கணவர் சுயநினைவின்றி இருந்த நிலையில் நான் அவருடைய வாயில் சூடான பாலை ஊற்றினேன் என்றால் இல்லை. அப்பொழுது அங்கு இருந்த செவிலியர் என்னுடைய செயலை பார்த்து கேட்டபோது நான் “என்னுடைய கணவர் உலகை விட்டு கிளம்ப தயாராகி விட்டதால் அவருக்கு இறுதி கடமை செய்ய வந்துள்ளேன்” என்று கூறினேன் என்றால் நான் மருத்துவமனைக்கு சென்ற பிறகு அங்கு இருந்த செவிலியர் பார்த்து என்னை பார்த்து நீங்கள் யார் என்று கேட்டார், அதற்கு நான் நோயாளியின் மனைவி என்று கூறிய போது, என்னுடைய

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.21 17:44:56 +0530

கணவரின் இரண்டாவது மனைவியை பார்த்து அவர் யார் என்று கேட்டதற்கு இரண்டாவது மனைவி என்று கூறினேன்.

38. என்னுடைய மருமகனின் தூண்டுதலின் பேரில் தான் நான் சுயநினைவின்றி மேற்படி பாதகமான செயலை செய்தேன் என்றால் இல்லை. என்னுடைய கணவர் கொரோனாவில் இருந்து மீண்டு கைத்தடி கம்புடன் ஆட்டோவில் வீட்டிற்கு வந்தபோது நான் அந்த கம்பை புடுங்கி, என்னுடைய கணவரை கீழே தள்ளிவிட்டேன் என்றால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. அப்பொழுது ஆட்டோ டிரைவர் என்னுடைய கணவரை தூக்கி அழைத்துச் சென்றார் என்றால் என்னுடைய கணவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டபோது அவர் அவருடைய இரண்டாவது மனைவியுடன் சாத்தான்குளத்தில் லட்சுமி தியேட்டர் அருகே வாடகைக்கு குடியிருந்து வந்தார், அவர் அந்த வீட்டிற்கு தான் நேராக சென்றார், நான் இருந்த வீட்டிற்கு வரவில்லை. என்னுடைய கணவருக்கு கொரோனா பாதிப்பு இருந்ததால் அவர் வாடகைக்கு இருந்த வீட்டின் தெருவிற்குள் அனுமதிக்கவில்லை என்பதால் அவருடைய நண்பரின் வீட்டில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

39. என்னுடைய வீட்டிற்கு எதிரில் முத்தம்மாள் என்பவரின் பிளாட் இருக்கிறது என்றால் அங்கு பிளாட் கிடையாது. என்னுடைய கணவர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதற்கு மறுநாள் நான் எங்கள் வீட்டிற்கு அருகே உள்ள முத்தம்மாள் பிளாட் என்பவரின் பிளாட்டில் உள்ள கல்லில் என்னுடைய மாமனார் மற்றும் மாமியாரின் கண்ணாடி பிரேம் போட்ட புகைப்படத்தை உடைத்து விட்டேன் என்றால் எங்கள் வீட்டில் என்னுடைய மாமனார் மற்றும் மாமியாரின் புகைப்படம் கிடையாது. எனக்கு என்னுடைய மகனின் தாயார் தான் மருந்து கொடுக்கிறார் என்றால் எனக்கு சுகர் மற்றும் தைராய்டு பிரச்சனை மட்டும்தான் இருக்கிறது, அது நோய் கிடையாது, அதற்கான மருந்துகளை நான் மருத்துவரின் பரிந்துரையின் படி வாங்கி சாப்பிட்டு கொள்வேன்.

40. நான் என்னுடைய மருமகனின் தூண்டுதலின் பேரில், என்னுடைய எதிர்கால வாழ்க்கையை பற்றி யோசிக்காமல் பொய்யாக இந்த வழக்கு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா இறந்த பிறகு அவருடைய சொத்துக்களை நாங்கள் சமமாக பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். நான் தற்போது குடியிருக்கும் வீடு என்னுடைய கணவரால் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் கடன் வாங்கி கட்டப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அந்த கடனை என்னுடைய கணவர் ஒரு மாதம் மட்டும் செலுத்தி விட்டு, திருநெல்வேலி என் ஜி ஓ பி காலனியில் உள்ள என்னுடைய சொத்தை விற்பனை செய்து அதிலிருந்து வந்த பணத்தை வைத்து கடனை அடைத்துவிட்டார். மேற்படி கடனை திருப்பி செலுத்துவதற்காக என்னுடைய கணவர் பணத்தை தயார் செய்ததாக நான் கூறும் விதம் பொய்யானது என்றால் சரியல்ல.

41. சாத்தான்குளம் ஸ்டேட் வங்கி எனக்கு வங்கி கணக்கு இருக்கிறது என்றால் சரிதான், 2020 ஆம் ஆண்டிற்கு பிறகு துவங்கப்பட்டது. அந்த வங்கி கணக்கை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள என்னுடைய பொறுப்புகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான பிரமாண பத்திரத்தில் கூறவில்லை என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கில் பல லட்சம் ரூபாய் பணம் வைத்து செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதிலிருந்து எனக்கு மாதம் ரூபாய் 10

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.21 17:44:59 +0530

ஆயிரத்திற்கு மேல் வெளியே இருந்து பணம் வருகிறது என்றாலும், அதனால் தான் அந்த வங்கி கணக்கை நான் இந்த வழக்கில் இருந்து மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல, அந்த வங்கி கணக்கில் என்னுடைய தங்கை மற்றும் மருமகன் எனக்கு என்னுடைய மருத்துவ மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ரூபாய் பத்தாயிரத்திற்கு மேல் அனுப்பி வருகிறார்கள். அது என்னுடைய செலவுக்கு ஆகும். நான் என்னுடைய பிரமான பத்திரத்தில் உண்மைகளை மறைத்ததால் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றத்தை செய்துள்ளேன் என்றால் இல்லை.

42. என்னுடைய மருமகனின் தூண்டுதல் மற்றும் தீய ஆலோசனையின் பேரில், நான் சாப்பிட்டு வந்த மருந்து மாத்திரைகளை நிறுத்திவிட்டு, சுய சிந்தனையின்றி என்னுடைய மருமகனின் முழு கட்டுப்பாட்டில் இருந்து வந்து, பொய் சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பொய்யான மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. (சாட்சி தன்னிச்சையாக நல்ல மனநிலையில் இருக்கும் அவரை திரும்பத் திரும்ப மனநிலை பாதிக்கப்பட்டு இருப்பது போல் கேள்வி கேட்பதால் இது தொடர்பாக இந்திய சட்டம் பிரிவு 150 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவருடைய ஆட்சேபனையை பதிவு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்) ஆகையால், அசல் மனுவை தாக்கல் செய்ய சரியான மனநிலை எனக்கு கிடையாது என்றால் சரியல்ல.

43. நான் தாக்கல் செய்துள்ள மனுவில், என்னுடைய கணவர் என்னை தனியாக வங்கி கணக்கு ஆரம்பிக்க அனுமதிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், என்னுடைய பெயரில் முதலூர் கனரா வங்கி, சாத்தான்குளம் அஞ்சலகம் மற்றும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் வங்கி கணக்கு இருக்கிறது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் உள்ள வங்கி கணக்கு என்னுடைய கணவர் என்னை விட்டு பிரிந்த பிறகு, 2020 ஆம் ஆண்டு துவங்கப்பட்டதாகும். முதலூர் கனரா வங்கியில் எனக்கு வங்கி கணக்கு இருக்கிறதா என்று சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் முதலூர் கனரா வங்கி கணக்கு எண் 13396 இல் உள்ள அசல் புத்தகம் என்னுடைய பெயரில் இருக்கிறது என்றால் அதில் உள்ள பெயர் மற்றும் முகவரி என்னுடையதாகும், ஆனால் என்னுடைய புகைப்படம் அதில் ஒட்டப்படவில்லை. என்னுடைய கணவர் கனரா வங்கியில் லீகல் அட்வைஸ்ராக இருப்பதால் அவர் போலியாகவும் அதை வாங்கி இருக்கலாம். என்னிடம் காட்டப்படும் சாத்தான்குளம் அஞ்சலக கணக்கு எண் 336404090 இல் உள்ள அசல் புத்தகம் என்னுடைய பெயரில் இருக்கிறது என்றால் அதில் உள்ள பெயர் மற்றும் முகவரி என்னுடையதாகும், ஆனால் என்னுடைய புகைப்படம் அதில் ஒட்டப்படவில்லை. என்னுடைய மனப்பிறழ்வின் காரணமாகத்தான் என் பெயரில் உள்ள ஆவணமே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

44. TN 69 S 3111 என்ற பதிவில் கொண்ட மாருதி ஆல்டோ கார் என் பெயரில் இருந்தது என்றால் சரிதான். தற்போது அந்த கார் என்னுடைய பெயரில் இல்லை என்றாலும், என்னுடைய மருமகனின் பெயரில் இருக்கிறது என்றாலும் சரிதான், நான் என்னுடைய மகளுக்கு அதை கொடையாக கொடுத்துவிட்டேன். நான் என்னுடைய மகளுக்கு கொடையாக கொடுத்ததாக கூறுவது பொய் என்றாலும், என்னுடைய மருமகன் என்னை வற்புறுத்தி அந்த காரை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டார் என்றாலும் சரியல்ல, என்னுடைய

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.21 17:45:03 +0530

மகள் கருவுற்றிருந்ததால் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக நான்தான் காரை கொடுத்தேன். என்னிடமிருந்து காரை என்னுடைய மருமகன் வாங்கிக் கொண்டது போல் என்னிடமிருந்த வெள்ளி மற்றும் தங்கம் போன்ற விலை உயர்ந்த பொருட்களை என்னுடைய மருமகன் லாரியில் எடுத்துச் சென்று விட்டார் என்றால் இல்லை.

45. என்னுடைய வீட்டில் மூன்று தென்னை மரம் இருக்கிறது என்றால் சரிதான். அதில் உள்ள தேங்காயை யார் பறிப்பார்கள் என்றால் என்னுடைய கணவர் பிரிந்து சென்ற பிறகு நான் ஆள் வைத்து தேங்காய் பறிப்பது கிடையாது, அதுவாக கீழே விழும் தேங்காயை மட்டும் எடுத்துக் கொள்வேன். நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், என்னுடைய மருமகனின் அப்பா 40 நாட்களுக்கு ஒரு முறை ஆள்களை அழைத்து வந்து தேங்காய் பறித்து கொண்டு சென்று விடுவார் என்றாலும் சரியல்ல.

46. என்னுடைய பிறப்புறுப்பு வளர்ச்சி இல்லை என்று 11.08.1995ம் தேதி திருநெல்வேலியில் உள்ள கெட்வேல் மருத்துவமனையில் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றாலும், அது வெற்றியடையவில்லை என்றாலும் சரியல்ல, நான் கேட்வேல் மருத்துவமனைக்கு சென்றதே கிடையாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கெட்வெல் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட என்னுடைய அசல் மருத்துவ குறிப்புகள் என்றால் அதில் உள்ள பெயர் என்னுடையதுதான், ஆனால் நான் அந்த மருத்துவமனைக்கு செல்லவில்லை என்பதால் அந்த ஆவணம் எனக்குரியதல்ல. அது போலியாக உற்பத்தி செய்யப்பட்டதாகும். போலியாக உற்பத்தி செய்யப்பட்டதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இயற்கையிலேயே எனக்கு தாம்பத்திய உறவில் ஈடுபடக்கூடிய உடல் மற்றும் மன தகுதி இல்லை என்றால் சரியல்ல, நாங்கள் 30 ஆண்டுகள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்துள்ளோம். நான் என்னுடைய கணவருடன் ஒருமுறை கூட தாம்பத்திய உறவில் ஈடுபட்டது இல்லை என்றால் சரியல்ல. இருந்தாலும் என்னுடைய கணவர் என்னுடன் 30 ஆண்டுகள் சந்தோசமாக வாழ்ந்து வந்தார் என்றால் நாங்கள் 30 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்து வந்தோம், ஆனால் சந்தோஷமாக வாழ்ந்தோம் என்று கூற முடியாது.

47. என்னுடைய உடன்பிறந்த தங்கை பெயர் மாலதி என்றால் சரிதான். தாம்பத்திய வாழ்வில் என்னால் ஈடுபட முடியாது என்று தெரிய வந்ததால் நான், என்னுடைய மாமனார் மற்றும் மாமியார், மற்றும் மாலதி சேர்ந்து என்னுடைய கணவரையும் மாலதியையும் சேர்ந்து வாழ சொன்னோம் என்றால் இல்லை. நாங்கள் அவ்வாறு கூறினோம் என்றாலும், அதற்கு என்னுடைய கணவர் மறுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. அதனால் என்னுடைய தங்கை மாலதியின் அடி மனதில் என்னுடைய கணவரின் மீது வெறுப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

48. என்னுடைய மருமகன் செல்வ சுரேஷ் கிரெடிட் கார்டு மூலம் ஆடம்பர பொருட்கள் வாங்கி சுமார் ரூபாய் 55 லட்சத்துக்கு மேல் கடனாகி விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மகளின் திருமணம் முடிந்த பிறகு என்னுடைய மருமகன் வீடு கட்டுவதற்காக மெஞ்ஞானபுரம் இந்தியன் வங்கியில் கடன் வாங்கி கொடுக்குமாறு என்னுடைய கணவரிடம் கேட்டார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு என்னுடைய மருமகன் கேட்டார் என்றாலும், என்னுடைய மருமகன் கடனில் இருப்பதால் என்னுடைய கணவர்

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.21 17:45:06 +0530

மறுத்தார் என்றாலும், அதன் காரணமாக என்னுடைய மருமகனுக்கு என்னுடைய கணவர் மீது வெறுப்பு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரூபாய் பத்து லட்சத்தை கடன் வாங்கக்கூடிய நிலையில் இருந்த என்னுடைய மருமகன் 2023 ஆம் ஆண்டு தேரிகுடியிருப்பில் பல லட்சம் மதிப்புள்ள 74 சென்ட் நிலத்தை கிரயமாக வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தை என்னுடைய மருமகன் என்னுடைய கையில் இருந்த நகைகள் மற்றும் உடமைகளை வைத்து தான் வாங்கினார் என்றால் இல்லை.

49. என்னுடைய கணவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது என்னுடைய கணவர் உள்ளூர் வழக்கறிஞர் என்பதால் அவர் மீது புகாரை எடுக்க மறுத்ததாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில், என்னுடைய கணவர் மீது தூத்துக்குடியில் உள்ள காவல் துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்தேனா என்றால் அவ்வாறு புகார் கொடுக்க வேண்டும் என்ற நடைமுறை எனக்கு தெரியாது. உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுக்கலாம் என்று எனக்கு தெரியாது என்று நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

50. எங்களுடைய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஜாயிண்ட் அக்கவுண்ட் எண்.15413 எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

(எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுதலின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.21 17:45:09 +0530

Judicial Magistrate(FAC), Sathankulam.